பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 22 வெள்ளிக்கிழமை 06.01.2023 கதிர் 312

## நிதி மோசடி செய்த இரு பெண்கள் சிக்கினார்கள்!

யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பெண்கள் இருவர் நிதி மோசடி தொடர்பில் காங்கேசன்துறை விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். நீதிமன்ற வழக்குப் பொருள்களாக

8

## இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பேச்சு தொடர்பில்

# முஸ்லிம் மக்கள் மத்தியில் விஷமத்தனமான பிரசாரம்

### மு.கா. தலைவர் ஹக்கீம் கவலை



இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்கின்ற பேச்சு சம்பந்தமாக விஷமத்தனமான பிரசாரங்கள் முஸ்லிம் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுவது கவலைக்குரியது எனத் தெரிவித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்,

8

## உரிய முடிவு எடுக்காவிடின் நாடு மேலும் மோசமடையும்

### பொன்சேகா பகிரங்க எச்சரிக்கை



சரியான தலைவரிடம் இனி நாட்டை ஒப்படைக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்போதுள்ள பிரச்சினை மேலும் தொடரும். இப்போது இருப்பதைவிடவும் மோசமாக மாறும்.


– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

தெற்கு ஊடகம் ஒன்று வழங்கிய செவ்வியில் அவர் மேலும் கூறுகையில்,

2

## கோட்டாவைப் போல் விரைவில் பதவி துறந்து ஓடுவார் ரணில்!

### எதிரணி ஆரூடம்



கோட்டாபய ராஜபக்ஷவைப் போல் மிக மோசமான முறையில் ஆட்சியைக் கொண்டு செல்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எனவே, கோட்டாவைப் போல் ரணிலும்

8

## 'மொட்டு' கட்சியின் ஆட்டம் களுத்துறையில் ஆரம்பம்



உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கான நடவடிக்கையை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

2

## பொலிஸாருடனான துப்பாக்கிச்சூட்டில் 'கரவிட்ட சியா' பலி!




கொலைச்சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் ஒருவர் பொலிஸாருடனான துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தார்.

'கரவிட்ட சியா' என்ற புனைப்பெயர் கொண்ட நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் கடந்த டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி

2

## இந்தியக் கடன் உதவி திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 75 பஸ்கள் கையளிப்பு



இந்தியக் கடன் உதவி திட்டத்தின் கீழ் 75 கோடி ரூபா பெறுமதியிலான 75 பஸ்களை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே போக்குவரத்து அமைச்சர் பந்துல

2

## 'மொட்டு'விடம் ஏமாற மக்கள் தயாரில்லை

### ஹோஷ விதானகே விளாசல்



மக்கள் இனியும் மொட்டுக் கட்சியினரிடம் ஏமாறுவதற்குத் தயாரில்லை. அவர்கள் விழிப்புடன் இருக்கின்றார்கள் – என்று ஐக்கிய மக்கள்

8

## மத மோதலைத் தூண்டுவோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை

### நீதி அமைச்சர் உறுதி



வடக்கு, கிழக்கின் தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசு முயற்சிக்கும் இந்தத் தருணத்தில் நாட்டில் மத மோதலை ஏற்படுத்த முயற்சிப்போருக்கு எதிராகச் சட்டத்தைக் கடுமையாக

8

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

யாழ்., வடமராட்சி கிழக்கு, மணற்காடு பகுதியில் தனித்து வாழ்ந்து வந்த குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மணற்காடு பழைய தேவாலயத்துக்குப் பின்பாக உள்ள வீட்டில் வசித்து வந்த கந்தசாமி பன்னீர்ச்செல்வம் (வயது 56) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவருடைய சமையலறையில் இருந்து

2

## உமிக்குள் மறைத்து கசிப்பு கடத்திய மூன்று பேர் கைது!

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ்ஸில் உமிக்குள் மறைத்து கசிப்பு கொண்டு சென்ற 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

அரியாலை – மாம்பழம் சந்தியில் வைத்து 3 சந்தேக நபர்களையும் பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன் மூன்றுபேர் கைது செய்யப்பட்டனர்.

2

## தாயைத் தாக்கிய மகனை படுகொலை செய்த தந்தை

மதுபோதையில் வந்து தாயைத் தாக்கிய மகன் தந்தையின் தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது 25 வயதான வினுர விரஞ்சனா என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞர், வீட்டில் அவரது தந்தை, தாய் மற்றும் உடன்பிறந்தவர்களுடன் வசித்து வந்தார் எனவும், பத்து ஆண்டுகளுக்கு முன்பு வாகன விபத்தில் அவரது

8

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இந்தியக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணவர்த்தனவிடம் கையளித்தார். பத்தரமுல்ல ஜப்பான் நட்பு மாவத்தை பகுதியில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது கருத்துரைத்த போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன,

போக்குவரத்துத்துறை முக்கிய தருணத்தைதற்போது எதிர்கொண்டுள்ளது. கிராமிய வீதிகளுக்குப் பொருத்தமான வகையில் இந்தியக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் 75 பஸ்களைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்தியக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் 75 கோடி பெறுமதியிலான 75 பஸ்களைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. 75 ஆவது சுதந்திரத்தை முன்னிட்டு இந்த பஸ்களைகள் சகல டிபோக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

500 புதிய பஸ்களை இவ்வருடத்தில் பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது – என்றார்.

இந்த நிகழ்வில் இந்திய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே கலந்துகொண்டார்.

## மொட்டுக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய களுத்துறை மாவட்டத்தில் களமிறங்குவதற்கான கட்டுப்பணத்தை களுத்துறை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் மொட்டுக் கட்சி செலுத்தியது.

மொட்டுக் கட்சியின் களுத்துறை மாவட்ட தலைவரான முன்னாள் அமைச் சர் ரோஹித அபேகுணவர்தன தலைமையிலே கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ , சாகர காரியவசம், சனத் நிாந்த உள்ளிட்ட மொட்டுக் கட்சி முக்கியஸ்தர்களும் இதில் பங்கேற்றிருந்தனர்.

எதிர்வரும் 20 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை கட்டுப்பணம் செலுத்துவதற்குக் கட்சிகளுக்கும், சுயேட்சைக் குழுக்களுக்கும் வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது.

## பொலிஸாருடனான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹங்வெல்ல பகுதியில் உள்ள கடையொன்றின் உரிமையாளரைக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் என மேல் மாகாண தெற்கு மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், கடை உரிமையாளரின் கொலைக்கு உதவிய குற்றச்சாட்டின் கீழ் மேலும் இரு சந்தேகநபர்களைக் கைது செய்தனர்.

அதனடிப்படையில் குறித்த சந்தேகநபர் ஹங்வெல்ல நிரிபொல பிரதேசத்தில் தங்கியிருக்கின்றார் என்று கிடைத்த தகவலுக்கு அமைய சந்தேகநபரைத்தேடும்நடவடிக்கையைப் பொலிஸார் ஆரம்பித்தனர்.

அந்த நடவடிக்கையின் போது சந்தேகநபர் பொலிஸாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்.

அந்தவேளை பொலிஸார் மேற்கொண்ட பதில் துப்பாக்கிச்சூட்டில் சந்தேகநபர் பலத்த காயமடைந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

பலத்த காயமடைந்த சந்தேகநபர் அவிசாவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## குடும்பஸ்தர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலம் மீட்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று நாள்களாக அவருடைய நடமாட்டத்தை அவதானிக்க முடியவில்லை என்றும், நேற்று வீட்டில் துர்நாற்றம் வீசியது என்றும் கிராம அலுவலருக்கு மக்கள் அறிவித்தனர்.

கிராம அலுவலரும் மக்களும் இணைந்து வீட்டைத் திறந்து பார்த்தபோது சமையலறையில் உயிரிழந்த நிலையில் அவருடைய சடலம் காணப்பட்டது.

சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தபோது அவர் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறைப் பொலிஸார் மேற் கொண்டுள்ளனர்.

குறித்த நபரின் மனைவி 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்திருந்ததால் பன்னீர்ச்செல்வம் தனியாகவே வாழ்ந்து வந்தார் என்று அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

## உமிக்குள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெல் உமி மூடையில் நூதனமாக மறைத்து கொண்டு செல்லப்பட்ட கசிப்பே இவ்வாறு கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களைச் சான்றுப் பொருட்களுடன் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## உரிய முடிவு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தில் இருக்கும்போது என்னிடம் அதிக பலம் இருந்ததே. நான் எதுவும் செய்யவில்லையே. அதிகார துஷ்பிரயோகம் செய்யவில்லையே. நான் நினைத்திருந்தால் நாட்டையே உலுக்கி இருப்பேன். நான் சட்டத்தின்படியே – ஜனநாயகத்தை மதித்தே செயற்பட்டேன்.

இராணுவத்தில் இருந்த ஒருவர் ஆட்சிக்கு வந்தால் அவர் துப்பாக்கி முனையில் மக்களைத் துன்பப்படுத்துவார் என்றா நினைப்பது? அமெரிக்காவில் ஐந்து இராணுவத் தளபதிகள் ஜனாதிபதியாக இருந்திருக்கின்றார்கள். அவர்கள் யாரும் மக்களைத் துன்பப்படுத்தும் விதத்தில் – இராணுவ சர்வாதிகாரியாகச் செயற்பட்டதில்லை.

ஒருவர் அதிகாரத்துக்கு வந்தால் அவர் முதலில் என்ன தொழில் செய்துகொண்டிருந்தாரோ அதையே ஜனாதிபதியாகியும் செய்வார் என்று நினைக்கலாமா? மக்கள் என்னைப் பார்த்துப் பயப்படுவார்கள் என்றால், அவர்கள் முதுகெலும்பில்லாத ஒருவருக்குத்தான் நாட்டை ஒப்படைக்க வேண்டி வரும்.

விபச்சாரத்தை சட்டபூர்வமாக்குபவர்களிடமும் – கஞ்சா வளர்ப்பவர்களிடமும் – போதைப்பொருள் வியாபாரிகளிடமும் – ஊழல்வாதிகளிடமும் – திருடர்களிடமும்தான் நாட்டை ஒப்படைக்க வேண்டி வரும். இதுவரை காலமும் நடந்தது அதுதான். அதனால்தான் இந்த நாடு இப்போது படுகுழியில் வீழ்ந்துள்ளது.

மக்கள் துன்பத்துக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். மக்கள் இனியாவது சரியாக சிந்தித்து முடிவெடுத்தால் மாத்திரம்தான் நாடு தப்பும். அவர்களும் தப்புவார்கள்.

கோட்டாபயவை ஆட்சிக்குக் கொண்டு வந்து நன்றாகப் பட்டுவிட்டோம். நாம் செய்த தவறு என்னவென்று தேடிப் பார்த்துவிட்டோம். இதில் இருந்து பாடம் கற்பிக்க வேண்டும் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சம நீதி செய்க!

இலங்கையின் பெரும்பான்மையினரான பௌத்த, சிங்கள மக்களின் மத ரீதியான மதிப்பார்ந்த மையமாக விளங்குவது கண்டி தலதா மாளிகை. அங்கு புத்தரின் புனித பல் வைக்கப்பட்டு இருப்பதால் அது புனித தாது ஆலயம் என்று அழைக்கப்படுகிறது.

அதை ஒட்டிய மாதிரிக் கட்டமைப்பு ஒன்றை – போலி தலதா மாளிகை ஒன்றை – குருநாகல் பொத்துஹெரவில் கட்டும் எத்தனம் நடக்கின்றது என்று குற்றம் சுமத்தி, அதற்கு எதிராக மகாநாயக்க தேரர்கள் மேற்கொண்ட முறைப்பாடு தொடர்பில், முழுமையான விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணித்திருக்கின்றார்.

இதனை ஒட்டி கருத்து ஏதும் சொல்வது நமது நோக்கமல்ல. பௌத்த சாசனத்தையே தலையாய வழிகாட்டல் மார்க்கம் என்று கொண்டிருக்கும் சிங்கள, பௌத்த மக்களும், அந்த பௌத்தத்துக்கே முன்னுரிமையும் முக்கிய ஸ்தானமும் என்று அரசமைப்பு மூலம் உறுதிப்படுத்தியிருக்கும் நாட்டின் ஆட்சிப் பீடமும் எது சரியோ அதைச் செய்யட்டும்.

அந்த விடயத்தை ஒட்டி அபகீர்த்தி ஏற்படுத்தும் கருத்தை வெளியிட்டார் என்ற குற்றத்துக்காக பிரபல சிங்கள அரசியல் விமர்சகர் சேப்பால் அமரசிங்க நேற்று மாலை பெலன்விலவில் குற்றப் புலனாய்வு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இருக்கின்றார்.

இவ்விடயத்தை ஒட்டி நேற்று நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ வெளியிட்ட கருத்துக்கள்தான் நாம் கவனிக்க வேண்டியவை.

அமரசிங்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்றத்தில் உறுதி அளித்த அவர், நாட்டில் மத நல்லிணக்கத்தை சீர்குலைப்பதை அனுமதிக்க முடியாது என்று சீறியிருக்கின்றார்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பட்டயத்தின்படி (ICCPR) தேசிய இன அல்லது மத வெறுப்பை ஆதரித்தல், பாகுபாடு, விரோதம் அல்லது வன்முறையைத் தூண்டுவது தண்டனைக்குரிய குற்றம், பத்து ஆண்டுகளுக்கு மிகாமல் கடுமையான சிறைத் தண்டனை விதிக்க கூடிய விடயம் என்று நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மத நல்லிணக்கத்தை கெடுக்கும் தீயவர்கள் யார் எனினும் அவர்களுக்கு எதிராக சட்டம் பாய்வதில் தப்பில்லை. அது வரவேற்கப்பட வேண்டிய விடயம். அதுவும் இனக்குரோதத்தினால் நலிவுற்றிருக்கும் ஒரு நாட்டில், இத்தகைய சட்டங்கள் முழு அளவில் நடைமுறைப்படுத்தப் படுவது நல்ல அம்சம்.

ஆனால், அது முழு அளவில் சமச்சீராக, வேறுபாடு இன்றி, இந்த விடயத்தில் இன, மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தரப்புகளுக்கு எதிராகப் பாய்கின்றதா என்பதுதான் கேள்வி.

இவ்விடயத்தில் ஆட்சித் தரப்பின் அணுகுமுறை ஒரு கண்ணில் மண்ணையும், மறு கண்ணில் சுண்ணாம்பையும் தடவுவது போல அல்லவா நடக்கிறது?

'ஊசி போகும் இடம் பார்ப்பார்; உலக்கை போகும் இடம்பாரார்' என்பது போல இந்த இனவெறுப்பு நடவடிக்கைகள், சிறுபான்மையினரின் மதங்களுக்கு எதிராகப் பெரும் எடுப்பில், பெரும் ஆக்கிரமிப்பாக நடக்கிறது. குருந்தூர்மலையில் தொடங்கி அதன் பட்டியல் நீண்டது. நீதி அமைச்சர் குறிப்பிடும் அந்த சர்வதேச பட்டயம், சிறுபான்மையினரின் மதங்கள், இனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் விடயங்களிலும் சம முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்படி செய்தால் நல்லது.

## சட்டவிரோதமான முறையில் கடலட்டைகளை பிடித்த 9 பேர் கடற்படையினரால் கைதாகினர்!

### மன்னார் கடல் பகுதியில் சம்பவம்



மன்னாரில் சட்டவிரோதமான முறையில் கடலட்டைகளை பிடித்த 09 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மன்னார் அச்சங்குளத்தில் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம் டைவிங் கியர், 01 டிங்கி படகு மற்றும் சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட 168 கடலட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பல்வேறு வகையான சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக மன்னார் தீவைச் சூழவுள்ள கரையோர மற்றும் கடற் பரப்புகளில் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கடற்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் வங்காலை பகுதியைச் சேர்ந்த 25 வயதுக்கும் 58 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களின் உடைமைகள் சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

## கரைச்சி பிரதேச சபைக்கான வாகன சுத்திகரிப்பு நிலையம் திறந்து வைப்பு!




கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையால் 2 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்கான வாகன சுத்திகரிப்பு நிலையம் நேற்று (வியாழக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சத்தியராகவன், சபையின் உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து சுத்திகரிப்பு நிலையத்தைத் திறந்துவைத்தனர். சுமார் 36 வாகனங்களை பராமரித்தல் தூய்மைப்படுத்தல் என்பவற்றுக்காக ஏற்பட்ட அதிகமான செலவினங்களை குறைக்கும் வகையில் இந்த நவீன சுத்திகரிப்பு நிலை யம் உருவாக்கப் பெற்றது.

இதனால் சபை செலவீனங்களைக் கட்டுப்படுத்த முடியும் எனவும், ஏனைய அரச நிறுவனங்கள் கோரிக்கை விடுத்தால், அவர்களிற்கும் சேவை வழங்க முடியும் எனவும் தவிசாளர் குறிப்பிட்டார்.

## நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மார்கழி திருவாதிரை உற்சவம்!



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மார்கழி திருவாதிரை உற்சவம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்றது.

காலை 6.45 வசந்த மண்டபப் பூசை நடைபெற்று முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராக உள்வீதி வலம் வந்ததைத் தொடர்ந்து காலை 7.30 மணிக்கு வெளி வீதியில் எழுந்தருளினார்.

## தேசிய பூங்காவுக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பற்றுச்சீட்டுகளுக்கு டொலர்களில் பணம் செலுத்தி பெறலாம்!

யால தேசிய பூங்கா உட்பட தேசிய பூங்காக்களுக்கு வருகை தரும் வெளிநாட்டு பிரஜைகள் அமெரிக்க டொலர்களில் பணம் செலுத்தி நுழைவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்ய முடியும்.

வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சகம் தேவையான ஏற்பாடுகளை செய்துள்ளதாகவும், இந்தத் திட்டம் இந்த மாதம் ஆரம்பிக்கும் என்றும் தெரிவித்துள்ளது. டொலர்களை கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர, விடுத்த பணிப்புக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாள்களில் யால தேசிய பூங்காவிற்கு அதிகளவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## 20 ரயில்கள் நேற்று சேவையில் இல்லை!

ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள் இல்லாத காரணத்தால் நேற்று (வியாழக்கிழமை) 20 இற்கும் மேற்பட்ட ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என ரயில் நிலைய அதிபர் சங்கம் தெரிவித்துள்ளது.

அவற்றில், முன் ஆசன ஒதுக்கீடு செய்யப்பட்ட பதுளைக்கும் கொழும்பு கோட்டைக்கும் இடையில் ஒரு ரயிலும் அலுவலக ரயிலும் அடங்குவதாகவும் தெரிவித்துள்ளது. கேட்டுக்கொண்டுள்ளது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# முன்னாள் போப் ஆண்டவர் 16 ஆம் பெனடிக் உடல் நல்லடக்கம்; பல்லாயிரம் பேர் பங்கேற்று அஞ்சலி..!!











வத்திக்கான், ஜன.06

உலக கத்தோலிக்க கிறிஸ்தவமக்களின் அன்பையும், அபிமானத்தையும் பெற்றிருந்த முன்னாள் போப் ஆண்டவர் 16 ஆம் பெனடிக்ட் , பதவி விலகிய பின்னர் வாடிகனில் உள்ள மேட்டர் எக்லேசியா மடாலயத்தில் வசித்துவந்தார். வயதுமூப்பாலும், உடல்நலக்குறைவாலும் அவர் கடந்த டிசம்பர் 31, மரணம் அடைந்தார்.

20 ஆம் நூற்றாண்டின் மாபெரும் இறையியல் அறிஞராக கொண்டாடப்பட்ட அவரது மறைவு, உலக மெங்கும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியது. அவரது உடல் பொதும க்கள் மரியாதை செலுத்துவதற்காக வத்திக்கான் புனித பீட்டர் தேவாலயத்தில் கடந்த 2 ஆமம் திகதி முதல் வைக்கப்பட்டது. அங்கு 2 லட்சத்துக்கும் அதிகமானோர் வந்து அவருக்கு தங்களது மரியாதையை செலுத்தினர். இந்நிலையில், அவரது உடல் 5 ஆம் திகதி அடக்கம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

அந்த வகையில் முன்னாள் போப் ஆண்டவர் உடல் அடங்கிய பேழையை புனித பீட்டர் சதுக்கத்தில் வைத்து நேற்று உள்ளூர் நேரப்படி காலை 9.30 மணிக்கு இறுதி பிரார்த்தனை கூட்டம் நடைபெற்றது.

இதில் உலகமெங்கும் இருந்து கத்தோலிக்க பாதி ரியார்கள், பேராயர்கள், கார்டினல்கள், கன்னியாஸ்தி ரிகள் என ஏறத்தாழ 60 ஆயிரம் பேர் கலந்து கொண் டனர். அத்துடன் மூட்டு வலியால் அவதியுற்று வரும் தற்போதைய போப் ஆண்டவர் பிரான்சிஸ் சக்கர நாற்காலியில் வந்து, இந்த இறுதி பிரார்த்தனையை நடத்தினார்.

பைபிளில் இருந்து புனித வாசகங்கள் ஜெர்மனி, இத்தாலி, அரபி, போர்ச்சுக்கீசு, பிரெஞ்ச் மொழிகளில் வாசிக்கப்பட்டன. பதவியில் உள்ள போப் ஆண்டவர் ஒருவர், தனக்கு முந்தைய போப் ஆண்டவரின் இறு திச் சடங்கை நடத்தியது வரலாற்றில் இதுவே முதல் முறை. பிரார்த்தனைக் கூட்டத்தின் முடிவில் முன்னாள் போப் ஆண்டவர் 16 ஆம் பெனடிக்ட் உடல் வைக்கப்பட்டிருந்த பேழை மீது போப் ஆண்டவர் பிரான்சிஸ் புனித நீர் தெளித்தார்.

இறுதியாக போப் ஆண்டவர் 16 ஆம் பெனடிக்டின் உடல், அவருக்கு முந்தைய போப் ஆண்டவர் இரண்டாம் ஜான்பால் நல்லடக்கம் செய்யப்பட்டிருந்த புனித பீட்டர் தேவாலயத்தின் அடியில் அமைந்துள்ள 'வத்திக்கான் கிரோட்டஸ்' என்று அழைக்கப்படுகிற இடத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அங்கு மூன்றடுக்கு பேழை யில் வைத்து நல்லடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## சீனாவின் உண்மை நிலவரம் வெளியாவதில் தாமதம்; உலக நாடுகள் பலவும் அச்சத்தில்..!!



பீஜிங், ஜன.06

சீனா தனது கடுமையான பூஜ்ஜிய கொரோனா கொள்கையை டிசம்பரில் நீக்கியது இதனால் நோய்த்தொற்றுகள் மற்றும் இறப்புகளின் எண் ணிக்கை அதிகரித்து உள்ளதுடன் மருத்துவ மனைகள் மற்றும் சுடுகாடுகள் நிரம்பி வழிவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், சீனா தினசரி கொரோனா புள்ளி விவரங்கள் வெளியிடுவதை நிறுத்தியுள்ளது, மேலும் டிசம்பர் முதல் 22 கொரோனா இறப்பு களை மட்டுமே அறிவித்துள்ளது.

இப்போது, நிமோனியா போன்ற சுவாச நோய்க ளால் இறப்பவர்கள் மட் டுமே கணக்கிடப்படுகி றார்கள். பிரபல பாடகி லான்லான் மற்றும் பிறரின் மரணம் அதிகாரபூர்வ கணக்கு களில் பதிவானதை விட பெரிய இழப்புகள் பற்றிய ஊகங்களைத் தூண்டுகிறது என்று பிபிசி தகவல் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், சீனாவில் கடந்த புதன்கிழமை ஒரு புதிய கொரோனா மரணம் பதிவாகியுள் ளது, தற்போது அதிகாரப்பூர்வ இறப்பு எண்ணிக்கை 5,259 ஆக உள்ளது. ஆனால் பல்வேறு மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில், நாட்டில் தினசரி ஆயிரக்கணக் கான நோய்த்தொற்றுகள் மற்றும் இறப்புகள் காணப்படுகின்றன.

உலகிலேயே மிகக் குறைந்த கொரோனா இறப்பு எண்ணிக் கையை அரசியல் காரணங்களுக்காக சீனா குறைவாக காட்டுவதாக குற்றம் சாட்டப்படுகிறது.

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் கொரோனா அதிகரித்து வருவதால் நோயாளிகள், வயதான வர்கள், நடைபாதையில் ஸ்ட்ரெச்சர்களில் படுத்துக் கொண்டு சக்கர நாற்காலியில் அமர்ந்து ஒக்ஸி ஜனை எடுத்துக் கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது இதன் காரணமாக உலக நாடுகள் பலவும் மீண்டும்

கொரோனாப் பாதிப்பு உச்சமடைந்து உலகப் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமா என்கின்ற ரீதியில் அச்சமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

## பிரிட்டனில் 18வயது வரை அனைத்து மாணவர்களும் கணிதம் கற்க வேண்டும் என பிரதமர் கோரிக்கை..!!



லண்டன், ஜன.06

இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், புத்தாண்டில் முதல் முறையாக நாட்டு மக்களுக்கு உரை ஆற்றினார். அப்போது அவர் இங்கிலாந்து மாணவர்கள் அனைவரும் 18 வயது வரையில் கணிதத்தை படிப்பதை உறுதி செய்வதற்கான திட்டம் கொண்டு வர விருப்பம் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் குறிப்பிடுகையில், எல்லா இடங்களிலும் வேலைகளுக்கு தரவுகளும், புள்ளி விவரங்களும் முக்கியமாகி விட்ட இன்றைய உலகில், நமது குழந்தைகளின் வேலைகளுக்கு முன் எப்போதும் இல்லாத அளவில், கூடுதல் அளவிலான பகுப்பாய்வு திறன் தேவைப்படும். இந்த திறன்கள் இன்றி நமது குழந்தைகள் வெளி உலகுக்கு சென்றால், அவர்களை நாம் கீழே விழச் செய்வதாகத்தான் கருத வேண்டும் என தெரிவித்தார்.

ஆனால் இங்கிலாந்தில் 16 முதல் 19 வயது வரையிலானோரில் பாதிப்பேர்தான் கணிதத்தை படிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இதன் காரணமாகவே 18வயது வரையுள்ள அனைவரும் கணிதம் கற்பதை ஊக்குப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# லஷ்கர்–இ–தொய்பாவின் பினாமி அமைப்பான டி.ஆர்.எவ். பயங்கரவாத இயக்கமாக அறிவிப்பு




புதுடெல்லி, ஜன.06

தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான லஷ்கர்–இ–தொய்பாவின் பினாமி அமைப்பான டிஆர்எப் எனப்படும் எதிர்ப்பின் முன்னணியை உள்துறை அமைச்சகம் ஒரு பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளது. இந்த அமைப்பை சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் கீழ் பயங்கரவாத அமைப்பாக உள்துறை அமைச்சகம் அறிவித்திருக்கின்றது.

டி.ஆர்.எவ். 2019 இல் தொடங்கப்பட்ட இந்த அமைப்பு. பயங்கரவாத நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக ஒன்லைன் ஊடகம் மூலம் இளைஞர்களை சேர்த்து வருகிறது. பயங்கரவாத நடவடிக்கைகள், பயங்கரவாதிகளின் ஆள்சேர்ப்பு, பயங்கரவாதிகளின் ஊடுருவல் மற்றும் பாகிஸ்தானில் இருந்து ஜம்மு–காஷ்மீருக்கு ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றில் இந்த அமைப்பு ஈடுபட்டுள்ளதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் ஜம்மு–காஷ்மீர் மக்களை இந்திய அரசுக்கு எதிரான பயங்கரவாத அமைப்புகளில் சேரத் தூண்டுவதற்காக சமூக ஊடக தளங்களில் உளவியல் நடவடிக்கைகளில் இந்த அமைப்பு ஈடுபட்டுள்ளது என கூறப்பட்டு உள்ளது.

மேலும் டி.ஆர்.எவ். தலைவர் கே் சஜ்ஜத் குல் உபா சட்டத்தின் இன் கீழ் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்டவர் ஆவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# மத்திய பிரதேசத்தில் கோவில் மீது விமானம் மோதியதில் விமானி சாவு



போபால், ஜன.06

இந்தியாவின், மத்தியபிரதேச மாநிலம் ரேவா மாவட்டத்தில் உள்ள ஒரு கோவிலின் மீது இன்று ஒரு விமானம் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் விமானம் முற்றிலும் சேதம் அடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அதனை கண்டு அதிர்ச்சி அடைந்த அப்பகுதி மக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்திற்கு தீயணைப்பு வீரர்களுடன் விரைந்து வந்த ரேவா பொலிஸார் மீட்பு பணியில் துரிதமாக ஈடுபட்டனர்.

இந்தப் பயங்கர விபத்தில் விமானி உயிரிழந்த நிலையில், ஒருவர் படுகாயத்துடன் மீட்கப்பட்டார். உடனடியாக அவரை சிகிச்சைக்கான ரோவ பகுதியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு பொலிஸார் அனுப்பி வைத்தனர்.

மேலும், இந்த விபத்து குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் என ரேவா எஸ்.பி நவ்நீத் பாசின் தெரிவித்துள்ளார்.

# பெங்களூரில் இந்திய ரூ.20 கோடிக்கு நாய் ஒன்றை வாங்கிய தொழில் அதிபர்





பெங்களூர்,ஜன.06

பெங்களூரைச் சேர்ந்த தொழில் அதிபர் ஒருவர் இந்திய ரூ.20 கோடிக்கு நாய் ஒன்றை வாங்கி உள்ளார். இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளமையால் இந்தியாவில் இது ஆச்சரியமாகப் பலராலும் பார்க்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்திய நாய் வளர்ப்போர் சங்கத்தின் தலைவரும், பெங்களூரில் உள்ள 'கடபோம்ஸ் கென்னல்ஸ்' என்ற நாய் விற்பனை கடையின் உரிமையாளர் சதீஷ் என்கின்ற தொழில் அதிபர் தான் ரூ.20 கோடி கொடுத்து 'காகேசியன் ெப்பர்டு' இன நாயை வாங்கி உள்ளார். ஐதராபாத்தை சேர்ந்த தனது நண்பரிடம் இருந்து சதீஷ் இந்த நாயை வாங்கி உள்ளார். அந்த நாய்க்கு தற்போது ஒன்றரை வயது தான் ஆகிறது. நாய்க்கு 'கடபோம் ஹைடர்' என்றும் சதீஷ் பெயர் சூட்டி உள்ளார்.

இந்த நாய் பெரும்பாலும் ரஷ்யா, துருக்கி, சிர்கசியா, ஜார்ஜியா ஆகிய நாடுகளில் தான் காணப்படும் என்றும், இந்தியாவில் இந்த இன நாய்களை காண்பது மிகவும் அரிதானது என்று தெரிவிக்கப்படுகின்றது. காகேசியன் ெப்பர்டு இன நாய்கள் தைரியம், தன்னம்பிக்கை, பயமின்மை, அறிவுத்திறன் கொண்டவை ஆகும். இந்த நாய்கள் 10 முதல் 12 வருடங்கள் உயிர்வாழ கூடியவை ஆகும்.

சதீஷ் ஏற்கனவே 'திபெத்தியன் மஸ்டிப்' இன அரிய வகை நாயை ரூ.10 கோடி, 'அலஸ்கன் மலமுடே' இன அரிய வகை நாயை ரூ.8 கோடி, கொரியாவை சேர்ந்த 'தோசா மஸ்டிப்ஸ்' இன நாயை ரூ.1 கோடி கொடுத்து வாங்கி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் பரவும் வைரஸ் திரிவுகள் இந்தியாவிற்கு வந்த பயணிகளிலும்



புதுடெல்லி, ஜன.06

சீனாவில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிகரித்துள்ள நிலையில், இந்திய விமான நிலையங்களில் வந்திறங்குகிற வெளிநாட்டு பயணிகளில் 2 சதவீதத்தினருக்கு கொரோனா பரிசோதனை நடத்தப்படுகிறது.

டிசம்பர் 24 ஆம் திகதியில் இருந்து, கடந்த 3 ஆம் திகதி வரையில் 19 ஆயிரத்து 227 பயணிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

வர்களில் 124 பேருக்கு கொரோனா தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. அவர் களின் மாதிரிகள் மரபணு வரிசைப்படுத்தல் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அவற்றில் 40 மாதிரிகளுக்கான முடிவுகள் வந்துள்ளன. அவற்றில் 11 ஒமைக்ரான் துணை வகை வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாகஎக்ஸ்பிபி.1 வைரஸ் 14 பேருக்கும், பி.எவ்..7.4.1. வைரஸ் ஒருவருக்கும் தொற்றியிருப்பது தெரிய வந்துள்ளது. அதே நேரத்தில் இந்த உருமாறிய ஒமைக்ரான் துணை வகை வைரஸ்கள் புதிது அல்ல, ஏற்கனவே இந்தியாவில் நுழைந்திருப்பவைதான் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதைக் கண்டு பொதுமக்கள் பதற்றம் அடையத்தேவையில்லை, ஆனால் உஷாராக இருக்க வேண்டும், அரசுவெளியிட்டுள்ள வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும் என்று மத்திய சுகாதார மந்திரி மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டுள்ளார்.



# மூன்றாவது நாளாக இன்றும் அ.தி.மு.க பொதுக்குழு விவகாரம் விசாரணைக்கு

புதுடெல்லி, ஜன.06

கடந்த ஆண்டு ஜூலை 11 ஆம் திகதி நடந்த அ.தி.மு.க. பொதுக்குழு உத்தியோகபூர்வமானது என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றில் ஓ.பன்னீர் செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர் வைரமுத்து ஆகியோர் மேன்முறையீடு செய்துள்ளனர். இந்த மனுக்களை நீதிபதிகள் தினேஷ் மகேஸ்வரி, ரிஷிகேஷ் ராய் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து வருகிறது. இந்த வழக்கு பல கட்ட விசாரணைக்கு பிறகு ஜனவரி 4ஆம் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டது.

இரண்டு நாள் களாக இந்த வழக்கில் பரபரப்பான வாதங்கள் முன் வைக்கப்பட்டு வருகிறது. நேற்று ஓ.பன்னீர் செல்வம் தரப்பு வாதங்கள் நடைபெற்றன. இந்த நிலையில், இன்று எடப்பாடி பழனிசாமி தரப்பு வாதம் துவங்கி நடந்தன என்று தகவல்கள் வெளியாகி உள்ளது.

# தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்று சேரக் கோரி மட்டக்களப்பு காந்தி பூங்காவில் கவனவீர்ப்பு!











வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு பெற்றுத்தரக் கோரி இன்று வெள்ளிக்கிழமை காலை மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் மக்கள் ஒன்றிணைந்து கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

தமிழ் அரசியல் கட்சிகளே ஒன்று சேருங்கள், தமிழ் கட்சிகளே அரசியல் தீர்வுக்காக ஒன்றாக செயற்படுங்கள், வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த அலகாக மாற வேண்டும் போன்ற கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தி மக்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். இதன் போது கலந்து கொண்ட பொது மக்கள் தாம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளான நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி, மண்ணெண்ணெய் இல்லாமை, உணவு நெருக்கடி, மக்களின் அபிலாசைகளை பொருட் படுத்தாத அரசியல் கட்சிகள், பூர்த்தி செய்யப்படாத மக்களின் முக்கிய தேவைகள் குறித்து அரசியல் கட்சிகள் சிந்தித்து தங்களுக்குள் மோதிக் கொள்ளமல் மக்களின் நலனை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என ஊடகங்களிடம் மக்கள் கருத்து முன்வைத்தனர். அத்தோடு தற்காலத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் தங்கள் சுயலாபத்தை பற்றி மட்டுமே சிந்தித்து பிளவுபட்ட நிலையில் உள்ளமையால் மக்களுக்கு உரிய அரசியல் தீர்வுகள் கிடைப்பதில்லை. எனவே மக்களின் தேவை குறித்து சிந்திக்கும் அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை முன் வைத்தனர். நிகழ்வில் அதிகளவான பொதுமக்கள் கலந்து கொண்டு, நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை பெற்று தருமாறு கோசங்கள் எழுப்பியவண்ணம் காந்தி பூங்காவில் நடைபவனி ஒன்றையும் முன்னெடுத்தனர். இந்த கவனவீர்ப்பில் சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## உதவும் கரங்கள் அமைப்பினால் மயிலம்பாவெளியில் உதவிகள்





(பழுவூரான்)

மயிலம்பாவெளி உதவும் கரங்கள் சிறுவர் இல்லத்தின் ஆங்கில புதுவருட நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

'உதவும் கரங்கள்' அமைப்பின் தலைவர் சதாசிவம் ஜெயராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, ஓய்வு நிலை வலய கல்வி பணிப்பாளர் மு.பவளகாந்தன், எஸ்.குணசேகரம், த.பத்மநாதன், ச.சந்திரகுமார் உள்ளிட்ட பலரும் அதிதிகளாக பங்கேற்றனர்.

இதன் போது, உடுப்பு, பாதணி, பாடசாலை கற்றல் உபகரணங்கள், புதுவருட கைவிசேடங்கள், பரிசுப்பொருள்கள், புத்தகப்பை, போன்றன வழங்கி வைக்கப்பட்டன.

## புதிய அரசியல் கூட்டணிக்கு 'கிழக்கின் கேடயம்' முயற்சி

(நூருல் ஹுதா உமர்)



உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டு, எதிர்வரும் வாரத்தில் வேட்புமனுவைக் கோரியுள்ளது. இதனை அடிப்படையாக கொண்டு பல்வேறு அரசியல் கட்சிகளும், அரசியல் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிவில் அமைப்புக்களும் தேர்தல் கூட்டுக்களையும், அரசியல் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மும்முரமாக மேற்கொண்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக அரசியலில் அடிப்படையிலிருந்து மாற்றத்தை உருவாக்கும் நோக்கில் கிழக்கின் கேடயம் அமைப்பு புதிய அரசியல் கூட்டணி ஒன்றை உருவாக்கி கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தேர்தலில் போட்டியிடச் செய்யும் வேலைகளை ஆரம்பித்துள்ளது. அதனடிப்படையில் கிழக்கின் கேடயம் பிரதானி எஸ்.எம். சபீஸின் புதிய அரசியல் கூட்டணி ஒன்றை உருவாக்கும் முயற்சிக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பச்சைக்கொடி காட்டியுள்ளதாகவும், ஏனைய சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெறுவதாகவும் அறிய முடிகிறது. அண்மைக்காலத்தில் அம்பாறை மாவட்டம் தாண்டி, கிழக்கு மாகாணம் முழுவதும் சிறுபான்மை மக்களின் தேவைகளை முன்னிறுத்தி எஸ் எம் சபீஸ் தலைமையிலான கிழக்கின் கேடயத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளது. இதை மையமாக கொண்டு கல்விமான்கள், இளைஞர்கள் அடங்கிய குழுவினர் இந்த புதிய அரசியல் கூட்டணியில் எதிர்வரும் தேர்தல்களில் களமிறங்க தயாராகி வருகின்றனர் என்று கூறப்பட்டது.

## மனித ஆள்கடத்தல் குறித்து விழிப்புணர்வுக் கருத்தரங்கு!

### மட்டு. எஸ்போ நிறுவனத்தின் ஏற்பாட்டில்

(பழுவூரான்)

நாடு கடத்தல் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் பற்றிய சூழமைவில் கடல்வழியாக ஆள்கடத்தல், மனித வியாபாரம் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு மட்டக்களப்பு எஸ்கோ அலுவலகத்தில் நேற்று இடம் பெற்றது.



நாடு கடத்தல் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்திற்கு எதிரான அமைப்பு, சமூக மேம்பாட்டு சேவைகள் அமைப்பு மற்றும் எஸ்கோ – கிழக்கிலங்கை சமூக எழுச்சி தன்நம்பிக்கை அமைப்பு ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒருங்கிணைந்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களுக்கு இக்கருத்தரங்கு நடாத்தப்பட்டது. கடல்வழியாக ஆள்கடத்தல், புலம் பெயர்தல் போன்ற பாதுகாப்பற்ற சட்டவிரோத பயணங்களால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி இதன்போது ஊடகவியலாளர்களுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

# சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்கு முறைகளை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தும் ஓவியக்கண்காட்சி!



லண்டன் மாநகரின் புகழ்மிக்க வில்லியம்சன் கலைக்கூடத்தில் சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு தனி ஆற்றுஷ்கானது இலங்கையின் சிறுபான்மையோருக்கு எதிரான ஒடுக்கு முறைகளை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தும் முகமாக ஓவியக்கண்காட்சி நடத் தப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலை பீடத்தில் சித்திரமும் வடிவமைப்பும் பாடத்தில் சிறப்புப் பட்டதாரியான இவர், பல்கலைக்கழக காலம் தொடக்கம் இன்று வரை இலங்கையில் மட்டுமல்லாது ஆசிய ஐரோப்பிய நாடுகளிலும் தனியாகவும் குழுவாகவும் திறந்த வெளிகளிலும் கண்காட்சி கூடங்களிலும் தனது படைப்பாக்கங்களை தனது பின்நவீனத்துவ சித்தாந்தம் மாறாத பாணியில் துல்லியமாக வெளிப்படுத்தி வருகின்றார்.

இக்கலைஞனால் இராமநாதன் நுண்கலை பீடத்தில் நிகழ்த்தப்பட்ட 'கிராமத்து தலையணை' எனும் தனிக்கலை கண்காட்சியும் 'திசைகள்' எனும் குழுக் கலைக் கண்காட்சியும் சிறப்பிடம் பெறுகின்றது.

இது போன்று சர்வதேச கலைஞர்களுடன் ஒன்றிணைந்து செயற்படுகின்ற இலங்கையின் புகழ்பூத்த கலைக்கூடங்களான Threetha IntenationalPerformance Platform மற்றும் Saskia Fernando Gallery, Celebrate Colombo ONE WON Exhibition போன்றவற்றினூடாக பல்வேறு தலைப்புக்களில் உள்நாட்டு வெளிநாட்டுக் கலைஞர்களின் மத்தியில் தான் நிகழ்த்திய தனி மற்றும் குழு கண்காட்சிகளும் திறந்த வெளி பின்நவீனத்துவ கருத்தாக்க ஆற்றுகைகளும் மற்றையவர்களுக்கு தான் சொல்ல வந்த கருத்தை இலகுவாகக் கொண்டு சேர்க்கக் கூடிய நுட்பமாக விளங்கியது.

இந்தக் கலைஞரால் பிரித்தானியாவில் லண்டன் மாநகரின் புகழ்மிக்க வில்லியம்சன் கலைக்கூடத்தில் சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு நிகழ்த்தப்பட்ட தனி ஆற்றுகை இலங்கையின் சிறுபான்மையோருக்கு எதிரான ஒடுக்கு முறைகளை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தும் முகமாக அமைந்திருந்ததுடன் தமிழ் மரபுத் திங்கள் கொண்டாட்டத்தை முன்னிட்டு இவரால் லண்டண் நகரில் இன்னுமொரு குழுக் கண்காட்சியும் நடத்தப்பட்டது. இவரது கலைத்துவத்தை கண்டம் கடந்தும் முன்னெடுப்பதை வெளிப்படுத்துகின்றது.

மேலும் இந்தக் கலைஞர் உலகலாவிய கலைஞர்களை ஒன்று சேர்த்து நாடத்தப்படுகின்ற பல்வேறு பயிற்சிப் பாசறைகளில் உள்நாட்டுளிலும் வெளிநாட்டுகளிலும் பங்குபற்றி அவர்களுடன் இணைந்து செயற்பட்டமை ஏனைய நாடுகளுக்கும் தனது கலைத்துவத்துவத்தின் ஊடாக சமூகத்தில் புரையோடிப் போய் இருந்த பிரச்சினைகளை படம் பிடித்துக் காட்டும் வண்ணம் அமைந்திருந்தது. இவ்வாறாக பின்நவீனத்துவ கலை கள் ஊடாக சமூகத்தை நேசிக்கின்ற இக் கலைஞரின் கலைப்பயனம் தொடர எமதுவாழ்த்துக்கள்.

## சொத்தி உபாலியின் மகன் மெனிங் டவுனில் கைது!

நாட்டில் பாரிய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான சொத்தி உபாலியின் முதல் மனைவியினது மகன் சஜித் ரந்திக என்பவர் 9 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் பொரளை, மெனிங் டவுன் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 4 வாள்கள் மற்றும் கத்திகள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நபர் பல வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என தகவல்கள் வெளியாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். அத்தோடு சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## பண்டிதர் வீரகத்தி நூற்றாண்டு நினைவு கரவெட்டியில் ஞாயிறன்று நிகழ்வுகள்

இலக்கண, இலக்கியப் பேராசான் பண்டிதர் க.வீரகத்தி அவர்களின் நூற்றாண்டு நிறைவு நிகழ்வு வடமராட்சி கரவெட்டி சாமியன் அரசடி தச்சை ஐங்கரன் அறநெறிப்பாடசாலை மண்டபத் தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் உபாலி பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் நினைவுப் பேருரைகளை பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் சி.சிவலிங்ராசா, ஓய்வுநிலை அதிபர் கி.நடராசா ஆகியோர் நிகழ்த்துவர்.

தலைமையுரையை ஓய்வுநிலை அதிபர் இ.இராகவனும் தொடக்கவுரையை யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஆ.இரகுநாதனும் சிறப்பு உரைகளை கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமாரும் யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனும் நிகழ்த்துவர்.

நிகழ்வை பண்டிதர் வீரகத்தி நூற்றாண்டு நிறைவு நினைவுக்குழு ஏற்பாடு செய்திருக்கிறது.



## 'வாரிதியார்' பதில்கள் நாளை முதல் மீண்டும் ஆரம்பம்!

உங்கள் பலரதும் வேண்டுகோளுக்கிணங்க, கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்கள் கேள்வி, பதில் பகுதியை நாளை முதல் மீண்டும் எழுதத் தொடங்குகிறார். 'உரலார் கேள்வியும், உலக்கையார் பதிலும்' என்று இம்முறை புதிய தலைப்பு. அப்படியானால் இனி 'உலகநாதர் ஒப்பீனியன்' இல்லையா? உலகநாதரின் ரசிகர்கள் பலர் ஏக்கத்துடன் கேட்பது புரிகிறது.

அது இல்லாமலா? ஆனால் ஒரு சிறிய மாற்றம். இனி. உலகநாதருக்குப் பதிலாகச் 'சல்லடையார் சலிக்கப்போகிறார்'. இம்முறையாவது யார் அந்தச் சல்லடையார்? என்பதைச் சொல்லுங்களேன் என்கிறீர்களா?

'மூச்!' அது பரமரகசியம். முடிந்தால் நீங்களே கண்டுபிடித்துக் கொள்ளுங்கள்! உரலாருடனும் உலக்கையாருடனும் சல்லடையாருடனும் நாளை சந்திப்போம்.

–ஆசிரியர்–

## முஸ்லிம் மக்கள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேவையற்ற சந்தேகங்களை எழுப்பி, மக்களைக் குழப்பி ஒட்டு மொத்த இனப்பிரச்சினைக்கான தீர்வு வருகின்ற சாத்தியப்பாட்டை குறைக்க முயற்சிக்கும் விடயமாகவே இதனைத் தான் உணர்வதாகவும் கூறினார்.

அத்துடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணும் விவகாரத்தில் சகல தரப்புகளும் இணங்குகின்ற நல்லதொரு தீர்வைமிக விரைவில் பெற்றுத்தறுவதற்கான முயற்சியை ஜனாதிபதி உளப்பூர்வமாக முன்னெடுப்பதாக இருந்தால் அதில் முஸ்லிம் தரப்பையும் இணைத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றகுத்தகைக்குகொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப் பெறுதல் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே ரவூப் ஹக்கீம் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அரசமைப்புதிருத்தம்தொடர்பாகவும் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பாகவும் ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளுடனும் குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்திருப்பது வரவேற்கத்தக்கது.

இது சம்பந்தமாக விஷமத்தனமான பிரசாரங்கள் முஸ்லிம் மக்கள் மத்தியில் கொண்டுசெல்லப்படுவதுகவலைக்குரியது.

இனப்பிரச்சினைக்குத்தீர்வு குறித்து, தமிழ் மக்களின் அபிலாஷைகள் என்பது சில சமயங்களில் முஸ்லிம்களின் அபிலாசைகளுடன் முரண்பட்ட விடயங்களாக இருக்கின்ற போது, தேவையற்ற சந்தேகங்களை எழுப்பி, மக்களைக் குழப்பி ஒட்டுமொத்த இனப்பிரச்சினைக்கான தீர்வு வருகின்ற சாத்தியப்பாட்டை குறைக்க முயற்சிக்கப்படுகின்ற விடயமாகவே நான் உணர்கிறேன்.

அதனடிப்பையில் ஒட்டுமொத்த வடக்கு –கிழக்கு பிரதேசத்தையும் ஒரு அரசியல் அலகாக ஆக்கித்தர வேண்டும் என்ற கோரிக்கை தமிழர் தரப்பிலே நீண்டகாலமாக தெரிவிக்கப்பட்ட விடயமாக இருந்த போதிலும் அதிலே முஸ்லிம் தரப்பு சற்று மாற்றமான கருத்தைக் கொண்டிருக்கின்றது என்ற யதார்த்தத்தைத் தமிழ்த் தரப்பு புரிந்துகொண்டிருக்கும் என நாங்கள் முழுமையாக உணர்ந்திருக்கின்றோம்.

அந்த அடிப்படையிலே இந்த விவகாரத்திலே தேவையற்ற விமத்தனமான பிரசாரங்களை மேற்கொள்ளாமல், அரசோ, தமிழ்த் தரப்போ இந்தப் பேச்சு வார்த்தையை முன்னெடுக்கின்றபோது இந்த விவகாரத்தில் கரிசனை உடைய ஏனைய தரப்பினரையும் இணைத்துக்கொண்டு இதற்கான தீர்வுகளைக் காண்பார்கள் என்பதில் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றோம்.

அதனால் பிரச்சினைக்கான தீர்வு வருகின்ற போது அதனை இவ்வாறான விமத்தனமான பிரசாரங்கள் மூலம் குழப்பியடிக்க முனையாமல் இணக்கப்பாட்டுடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதிலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் நம்பிக்கையுடன் இருக்கின்றன. எனவே, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விவகாரத்தில் சகல தரப்புகளும் இணங்குகின்ற நல்லதொரு தீர்வை மிக விரைவில்பெற்றுத்தருவதற்கானமுயற்சியை ஜனாதிபதி உளப்பூர்வமாக முன்னெடுப்பதாக இருந்தால் முஸ்லிம் தரப்பையும் இதில் இணைத்துக்கொண்டு இந்த விவகாரத்தில் இறுதித் தீர்வைக் காண வேண்டும் – என்றார்.

## மத மோதல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமுல்படுத்தவுள்ளதாகத் தெரிவித்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, தலதா மாளிகை மற்றும் பௌத்தம் தொடர்பில் அவமதிப்பு கருத்துக்களை வெளியிட்டதாகக் கூறப்படும், சேபால் அமரசிங்க என்பவருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கூறினார்.

புனித தலதா மாளிகையை அவமதிக்கும் வகையில், சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ள கருத்து தொடர்பில் கடும் கண்டனங்களைச் சபையில்நேற்றுவெளியிட்டஎம்.பிக்கள், அரசு எடுக்கப்போகும் நடவடிக்கை என்னவெனவும் கேள்வி எழுப்பினர். இதற்கு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

புனித தலதா மாளிகை என்பது இலங்கையர்களுக்கு மாத்திரமல்ல உலகம் முழுவதும் வாழும் பௌத்த மக்களின் அடையாளம். எனவே, தலதா மாளிகையை அவமதிக்க, இந்த உலகில் எவருக்கும் உரிமை இல்லை. கடந்த சில நாட்களுக்கு முன்னர், சேபால் அமரசிங்கஎன்பவர் மிகவும் வெட்கக்கேடான வகையில் தலதா மாளிகையை அவமானப்படுத்தியுள்ளார். இதன் காரணமாக, பௌத்த உயர்பீடமும்,பௌத்த மக்களும் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இலங்கை அரசமைப்பின்படி ஒருவர், தம்மை நாத்திகன் என்று கூற உரிமை உண்டு. அதனை நாம் தடுக்கப்போவதில்லை. தாம் ஒரு சித்த சுயாதீனமற்றவர் என்று கூறவும் அவருக்கு உரிமை உண்டு. அதிலும் யாரும் தலையிட முடியாது எனினும், மத நல்லிணக்கத் தைச் சீர்குலைக்க சமூக வலைத்தளத்தை பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றம். இது ஒரு சமூக விரோதக் குழுவின் செயற்பாட்டை ஒத்ததாக உள்ளது.

அத்துடன் இது குற்றவியல் சட்டம், பிரிவு 290 இன் கீழ் தண்டனைக்குரிய குற்றகும். இதனடிப்படையில் நாட்டில் மதமோதலை ஏற்படுத்தல், மதநிந்தனை என்பவற்றுக்கு 10 வருட கடூழியச் சிறைத் தண்டனையையும் விதிக்க முடியும்.

எனவே, வடக்கு கிழக்கின் தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசு முயற்சிக்கும் இந்தத் தருணத்தில் நாட்டில் மத மோதலை ஏற்படுத்த முயலுவோருக்கு எதிராகச் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும். அந்த வகையில் தலதா மாளிகை மற்றும் பௌத்தம் தொடர்பில் அவமதிப்பு கருத்துக்களை வெளியிட்டதாகக் கூறப்படும் சேபால் அமரசிங்க என்பவருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

இதனை தொடர்ந்து கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி.,

சேபால் அமரசிங்க என்ற குறித்த நபர் கோட்டாபய ராஜபக்ச அரசில் கூட்டுத்தாபனம் ஒன்றின் தலைவராக இருந்தார். எனவே இது அரசின் ஒரு கிளர்ச்சி முயற்சியாக இருக்க முடியும் – என்றார்.

எனினும் இதனை மறுத்த, அமைச்சர் மஹிந்த அமரவீர, அப்படியான ஒருவர் எந்தவொரு கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் செயற்படவில்லை. அவர் பதவி வகித்திருப்பின் அதை ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும். அவருக்குக் காலிமுகத்திடல் போராட்டத்துடன் தொடர்பு இருக்கலாம் என்பதே எனது கருத்து – என்றார்.

## இரு பெண்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ள 70 பவுண் தங்கத்தை விடுவித்து தருவதாகக் கூறி 36 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாவை தங்கள் கணக்குகளுக்கு வைப்பிலிட வைத்து நிதி மோசடி செய்தமை தொடர்பில் சந்தேக நபர்களான இரு பெண்களும் கைது செய்யப்பட்டனர்.

குறித்த பெண்கள் இருவரும் நேற்று மாலை காங்கேசன்துறை விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் 36 மற்றும் 38 வயதுடைய வல்வெட்டித்துறை யைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

## கோட்டாவைப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விரைவில் பதவி துறந்து ஓடுவார். –இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹோ விதானகே தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதேச சபை உறுப்பினராக ஆவதற்குக்கூட முடியாமல் இருந்தவர். நாட்டைச் சீரழித்தவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அப்படிப்பட்ட ரணிலை ஜனாதிபதியாக்கியுள்ளார்கள்.

ரணிலைச் சிறைக்கு அனுப்பும் வரை நித்திரைகொள்ளமாட்டோம் என்று சொன்னவர்கள் இன்று ரணில் தான்சரியானதலைவர்என்கின்றார்கள். அவர்கள்தான் ரணிலை ஜனாதிபதியாக்கியுள்ளார்கள்.

மஹிந்த – கோட்டா ஆகியோர் பதவிகளைத் துறந்து ஓடி ஒளிந்துகொண்ட போது அவர்களுடன் சேர்ந்து ஒளிந்துகொண்ட 'மொட்டு'க் கட்சி எம்.பிக்கள் வீதிக்கு இறங்குவதற்கு வழியமைத்துக் கொடுத்தவர் இந்த ரணில். அதனால்தான் அவரைப் புகழ்ந்து பேசுகின்றார்கள் இவர்கள்.

அவர் மக்களின் போராட்டங்களை, பிரச்சினைகளை ஒதுக்கி வைத்துவிட்டு அவரது விருப்பத்தின்படி மிக மோசமான முறையில் ஆட்சியைக் கொண்டு செல்கின்றார். கோட்டாவைப் போல்தான் ரணிலின் ஆட்சியும் இருக்கின்றது. எனவே, கோட்டாவைப் போல் ரணிலும் விரைவில் பதவி துறந்து ஓடுவார்– என்றார்.

## தாயைத் தாக்கிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வலது கால் பகுதி அகற்றப்பட்டது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர் தினமும் குடித்துவிட்டு வந்து தனது தாய், தந்தை மற்றும் சகோதரர்களை அவர் தாக்கி வந்துள்ளார்.

நேற்றிரவும் குடித்துவிட்டு வந்து தாயை அவர் தாக்கிய போது, தந்தை தலையிட்டு அவரைத் தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

## 'மொட்டு'விடம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

மொட்டுக் கட்சியினர் இன்னும் அவர்களின் இயலாமையை ஒத்துக் கொள்ளாமல் மேலும் மேலும் பொய்களைச் சொல்லிக்கொண்டு அரசியல் செய்கின்றனர். நேர்மையாக அரசியல் செய்ய முடியாவிட்டால் அரசியலில் இருந்து ஒதுங்கிவிட வேண்டும். அப்படிச் செய்யாது மக்களை ஏமாற்றும் வேலையை அவர்கள் செய்து வருகின்றனர்.

மக்கள் இனியும் ஏமாறுவதற்குத் தயாரில்லை. மக்கள் விழிப்புடன் இருக்கின்றார்கள். அவர்கள் சரியான தலைவர்களுடன் பயணிக்க விரும்புகின்றார்கள். இதை மொட்டுக் கட்சியினரிடம் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

2022 மிகவும் மோசமான வருடம். 2023 இல் மீண்டெழுவதற்கு மக்கள் முயற்சி செய்ய வேண்டும்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின் ஜேர்மனி –ஜப்பான் போன்ற நாடுகள் எழுந்து நின்றது போல் எம்மாலும் எழுந்து நிற்க முடியும். ஆனால், மக்கள் இந்தப் பொய்யர்களை – திருடர்களை விரட்டி விட்டு சரியான தலைவர்களுடன் ஒன்றிணைந்து நிற்க வேண்டும்.

2023 தேர்தல்களைச் சுமந்த வருடம். உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் நிறைந்த வருடம். மக்கள் இதைச் சரியாகப் பயன்படுத்தி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் –என்றார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.01.2023 இல் வெளியிடப்பெற்றது.